Registered Post with A/D

07.09.2015

From

S. Peter Raj M.A(His), M.A(Eco), M.A(Eng), M.A(Psy), M.A(Soc), M.A(Pol), M.A(Pub.Admin), M.A(GT), M.A(Ind.Cul), M.Ed, B.G.L.,
AVE MARIA -9, Rice Shop Street,SATANKULAM– 628 704, Thoothukudi District
Email:sssavemaria@gmail.com
Mobile:94425 29442

To

The Public Information Officer
Office of the District Educational Officer
Thoothukudi

Sir,

Sub: Information requested under RTI Act 2005 - Regarding

Ref: 1.Your letter O.Mu.No.1563/B3/15 dated 24.03.2015
2. Report signed by Bishop YvonAmbroise 2015/38 dated 09.03.2015.

Along with the first letter cited above you sent the report of Bishop YvonAmbroise signed in the capacity of Manager R.C.Schools, Thoothukudi (ref.2). You have accepted the report as it is. On the basis of this report I request you to give the following information and copy of documents under RTI Act 2005 for which I have affixed a court fee stamp to the value of Rs 10.00.

In the first paragraph his statement goes as follows:-
தி தூத்துக்குடி டயோசீசன் அசோசியேசன் என்ற பெயரில் 14.04.1937-ல் பதிவு செய்யப்பட்ட தூத்துக்குடி ஆர். சி. டயோசிஸ் (The Roman Catholic Diocese ofTutucorin) இயங்கி வருகிறது. மேற்படி டயோசிஸ்-ன் சிறுபான்மை உரிமை 24.9.76-ல் வெளியான நீதிமன்ற தீர்ப்பு W.P. 570/1975 – படி உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த தீர்ப்பின் நகல் அரசு வழக்கறிஞரிடம் இருந்து பள்ளிக்கல்வி இயக்குநர் வழியாக சம்மந்தப்பட்ட அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.
Item1:-Please send the copy of the court order mentioned in the above paragraph in complete shape.

In the 2nd paragraph the following statement is given:-
ரிட் மனு 570/1975 என்பது எங்களது The Tuticorin Diocesan Associationபெயரில் பதிவு செய்யப்பட்டு The Roman Catholic Diocese of Tuticorin என்ற பெயரில் செயற்பட்டு வரும் எங்களது நிர்வாகத்திற்குறியதாகும். இந்த வழக்கின் மனுதாரரர் Rev. Fr. Rosario Fernando, Superintendent of Roman Catholic Schools, Tutuicorinஆவார்.
Item2:-Please send the copy of court order or government rules on which this management is functioning in the name other than the registered one.

Item3:-Please give the copy of permission given to this school management to function under the name other than the registered one.

Item4:-If <u>The Roman Catholic Diocese of Tuticorin</u> is a registered body, please send the copy of registration and bylaws of it.

Item5:-Please give information as to whether the Tuticorin Diocesan Association and Tuticorin Diocese are same or different? If they are same, please give information as to which one is registered and which one is not registered.

Item6:- Please give information as to why this management has chosen another name to function while it has a registered name <u>The Tuticorin Diocesan Association</u>.

In the 6th paragraph he states as follows:-
விடுப்புக்கு விண்ணப்பிக்கும் ஒரு ஆசிரியருக்கு விடுப்பு அனுமதிப்பது முற்றிலும் நிர்வாகத்தின் முழு உரிமை . இதில் அரசுக்குக் கூட தலையிட எந்த உரிமையும் இல்லை என்று சமீபத்தில் கூட மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவு பிறப்பித்துள்ளது. (Thirumathi G. ViijayaLakshmiVsThe Director of Elementary Education and others in W.P. No.18040 of 2014, தீர்ப்பாணை நாள்: 08.12.2014) எனவே, பத்தி 6-ல் கூறியுள்ள குற்றச்சாட்டுக்களை முற்றிலுமாக மறுக்கிறோம்.இதே பத்தி 6-ல்மனுதாரர் குறிப்பிட்டுள்ள ரிட் மனு எண்:9944/2014 -ன் அடிப்படையில் நடைபெற்ற விசாரணையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டுள்ளன என்பதையும் தாங்கள் அறிவீர்கள்.

Item7:-The Manager states that an enquiry was conducted on the basis of W.P(MD) No.9944/2014 and the charges leveled by the petitioner were rejected(நிராகரிக்கப்பட்டுள்ளன). Please send the date, time and place of the above enquiry conducted.

Item8:-Please send the details of persons and officers participated in the above enquiry. Please send the copy of official minutes and other remarks of the enquiry. Please send information about the whole report which ended in rejection of charges.

Item 9:-Please send the copy of court order mentioned in the same paragraph. (ThirumathiG.Vijaya Lakshmi VsThe Director of Elementary Education and others in W.P.No.18040 of 2014 order dated 08.12.2014)

Item 10:- If there is a law or rule to convert the duty period of a teacher into leave period, please send the copy of it.

In the 7th paragraph the statement goes as follows:-

Tuticorin Diocesan Associationஎன்பதே கல்வி முகமையாகும். பதிவு S1/1937 – 38,நாள் 14.04.1937 W.P.. 570/1975 –இல் பெற்ற நீதிமன்ற ஆணை அடிப்படையில், மாநிலக் கல்வித் துறையின் துணைச்செயலர், மடல் எண் 51559/RD2/76-14, நாள் 21.10.1976 மூலம் சிறுபான்மை அந்தஸ்தை உறுதிபடுத்தியுள்ளார்.

Item 11:-Please send the official copy of the above letter of Deputy Secretary of School Education Department - No. 51559/RD2/76-14 dated 21.10.1976. Please send the copy with your attestation.

In the 9th paragraph it has been stated as follows:-

ii) புகார் மனுதாரர், “சம்மந்தப்பட்ட பள்ளிகளுக்கு நிலம், கட்டடம் ஆகியவற்றிற்கு முறையான சட்டப்பூர்வமான பதிவு இல்லை ” என தெரிவிக்கிறார். எந்த பள்ளி என்பதை குறிப்பிட்டு தெரிவிக்காத்தால் உரிய விளக்கம் தர இயலவில்லை.

iii) ஆர்.சி.மிக்ஷன் என்பது “தி தூத்துக்குடி டியோசுஷயேசன் அசோசுஷியேசுஷனின் ” வரம்பிற்கு உட்பட்ட்து. ஆகவே, அதன் பெயரில் உள்ள நிலங்களை, பள்ளிகளில் பயன்படுத்துவதில் தீங்கு ஏதுமில்லை.

Item 12:-The manager states that he would supply information about the land for the schools if I specifically mention the name of the schools. In this connection I request the copy of land documents registered for St. Mary’s Higher Secondary School, Pothakalanvilai. Please take note that I do not need patta available in the name of R.C.Mission. I request you to send the copy of registered documents available in the name of school or educational agency.

Item 13:-In the same paragraph it is stated that <u>R.C.Mission</u> is under the limit of <u>The Tuticorin Diocesan Association</u>. Please send the copy of government orders or court orders or approvals obtained from the education department to the effect that R.C.Mission is under the limit of the Tuticorin Diocesan Association.

In the 10th paragraph the statement goes as follows:-

உயர்நீதிமன்றம் ஆணை பிறப்பித்து அது நடைமுறைபடுத்தப்பட்டு 40 ஆண்டுகள் கடந்த பின்னர் அதை மீளவும் நீதிமன்றம் தான் ஆய்வு செய்ய இயலும். மனுதார்ர் தாம் சொல்ல வேண்டிய பிரச்சனைகளை எழுத்து வடிவில் தெரிவிக்கலாம். மேலதிகாரி போல் ஆணையிடுவதை தவிர்க்க வேண்டும். அரசின் நிதி உதவி சட்ட விரோதமாக வழங்கப்பட்டு வருகிறது என குறிப்பிடுவது சரியல்ல. அங்கீகாரம் உள்ள பள்ளிகளில் பணிபுரியும் தகுதியான ஆசிரியர்களுக்கு மட்டுமே ஊதியம் விடுவிக்கப்பட்டு வருகிறது.

Item 14:- Please send the copy of court order passed and implemented for 40 years. If there are rules to the effect that we should not ask question if a mistake is implemented and followed for 40 years, please send the copy of it.

Item 15:-“மேலதிகாரி போல் ஆணையிடுவதை தவிர்க்க வேண்டும் ”என குறிப்பிடப்பட்டுள்ளது. **Pleasepoint out the lines or sentences in my representation to prove that I have ordered the as if I am the higher authority.**

In the 11th paragraph it has been stated as follows:-
போலியான ஆவணங்களை பயன்படுத்தி பள்ளிகளை நடத்தவில்லை. அரசின் நிதி உதவி கல்வித்துறையின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு பெறப்படுகின்றன. நிலம், கட்டிடம் தொடர்பாக அரசு தெரிவிக்கும் நெறிமுறைகளை கடைபிடிக்க நிர்வாகம் தயாராக உள்ளது.
Item 16:-BishopYvonAmbroise in his report addressed to your office states that the management is prepared to follow the principles of the government in respect of land and buildings of the schools, if it is informed by the government. Please give information as to whether you have sent instructions to the schools regarding land and building. Is so, please send the copies of your official letters sent to schools in this regard.

The District Educational Officer did not take any action against the school management after getting this report. It indicates his acceptance of this report as it is. Hence it is clearly understood that the above items of information are available in the office of the PIO.

I have requested information from you under 16 items. I request you to send all information in full shape. Please take note that the Manager or Superintendent of this management are not public authority. You have already informed me about this. It is for your kind information.

Finally I state that I am prepared to remit money additionally for obtaining the information sought for in full shape.

Thanking you.

With kind regards,
Signed by
S. Peter Raj

Registered Post with A/D

07.09.2015

From

S. Peter Raj M.A(His), M.A(Eco), M.A(Eng), M.A(Psy), M.A(Soc), M.A(Pol), M.A(Pub.Admin), M.A(GT), M.A(Ind.Cul), M.Ed, B.G.L.,
AVE MARIA -9, Rice Shop Street,**SATANKULAM**– 628 704, Thoothukudi District
Email:sssavemaria@gmail.com
Mobile:94425 29442

To

The Tamilnadu Information Commission
Chennai – 600 018

Respected Sir,

Sub: Appeal under RTI Act 2005 - Regarding

Ref:
1. My RTI Petition dated 22.12.2014
2. PIO's letter ஓ.மு.No.103482/ஜி2/இ2/2015 dated 06.01.2015
3. ஓ.மு.No.125/B3/2015 dated 02.02.2015 of PIO, O/o the CEO, Thoothukudi
4. Thoothukudi DEO's letterதொ.ஓ.மு.எண்.809/ஆ3/15 நாள் 26.03.15
5. Manager's letter 2015/53 dated 19.03.2015
6. My appeal to the appellate authority dated 27.07.2015

கீழ்கண்ட இரு கடிதங்களின் அடிப்படையில் நான் சென்னை பள்ளிக்கல்வி அலுவலர் அலுவலகத்தின் பொதுத்தகவல் அலுவலரிடம் பார்வை 1ல் காணும் மனு மூலம் தகவல் வேண்டினேன்.

1.Letter Na.Ka.No.82412/டி/இ3/07 dated 25.03.2008 of DSE, Chennai
2. Letter Na.Ka.No.82412/டி/இ3/07 dated 03.11.2008 of DSE, Chennai

இக்கடிதங்கள் இரண்டையும்சென்னை பள்ளிக் கல்வி இயக்குநர் கையெழுத்திட்டு அனுப்பியுள்ளார். இக்கடிதங்களில் மேற்படி அலுவலகம் குறிப்பிட்டுள்ள விவரங்களின் அடிப்படையிலும் அன்னாரின் O.Mu.No.101077/G2/E3/2007 dated 28.01.2008 என்ற கடிதத்தின் அடிப்படையிலும் 11 இனங்களில் தகவல்கள் வேண்டினேன்.

தகவல்களை அன்னாரின் அலுவலகத்தில் உள்ள சம்மந்தப்பட்ட கோப்பில் இருந்து தருவதற்குப்பதில் பொதுத் தகவல் அலுவலர் எனது மனுவை பிரிவு 6(3)ன் படி தூத்துக்குடி முதன்மைக் கல்வி அலுவலருக்கு பார்வை 2ன் மூலம் மாற்றினார்.

அதன்பின் தூத்துக்குடி முதன்மைக் கல்வி அலுவலர் பார்வை 3ல் கண்ட கடிதத்தில் எனது மனுவை தூத்துக்குடி மாவட்டக் கல்வி அலுவலருக்கு அனுப்பி தகவல் வழங்கிட உத்தரவிட்டார். இக்கடிதத்தின் அசல் நகல்கள் 2ஐ எனக்கு அனுப்பியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதன்பிறகு தூத்துக்குடி மாவட்டக் கல்வி அலுவலர் பார்வை 4ல் காண் கடிதம் மூலம் சம்மந்தப்பட்ட பள்ளிகளின் மேலாளரிடமிருந்து பெற்ற ஒரு கடிதத்தினை(பார்வை.5) அனுப்பி தகவலறியும் உரிமைச் சட்டம் 2005ன் படி மனுதாரர் கோரியுள்ள தகவல்களுக்கு ஆர்.சி.பள்ளிகள் மேலாளரிடமிருந்து பெறப்பட்ட கடித நகல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது என்று பதில் தந்துள்ளார். **தகவல்களை விதிகளின்படி அனுப்பிட இயலவில்லை** என குறிப்பிட்டுள்ள மேலாளரின் கடிதம்தான் 11 இனங்களுக்கும் இறுதியில் நான் பெற்றுள்ள தகவல்.

அதன்பின்னர்நான்பார்வை 6ல்காணும்மேல்முறையீட்டினைஅனுப்பிதகவல்தரவேண்டினேன்.இதுவரைதகவல்கிடைக்கவில்லை.

தகவலறியும் உரிமைச் சட்டத்தை மேற்படி அலுவலகம் மதிக்கவில்லை.

மேற்படி பொதுத் தகவல் அலுவலர் அலுவலகத்தில் உள்ள தகவலை மறைப்பதற்காக திட்டமிட்டு வேண்டுமேன்றே பிரிவு 6(3)ன் படி அனுப்புவதுபோல அனுப்பி நிர்வாகத்துடன் சேர்ந்து கூட்டு சதி செய்து தகவல் பெறவிடாமல் தடுத்துள்ளார். எனது மனுக்கள் அனைத்தும் இவ்வாறு தொடர்ந்து உதாசீனம் செய்யப்படுகின்றன.

எனவே உரிய நடவடிக்கை எடுத்து உதவிட இம்மேல்முறையீட்டின் மூலம் பணிந்து வேண்டுகிறேன். நன்றி.

உண்மையுள்ள,

இணைப்பு

பார்வையில் கண்ட அனைத்து கடிதங்களின் நகல்கள்

Registered Post with A/D

07.09.2015

From

S. Peter Raj M.A(His), M.A(Eco), M.A(Eng), M.A(Psy), M.A(Soc), M.A(Pol), M.A(Pub.Admin), M.A(GT), M.A(Ind.Cul), M.Ed, B.G.L.,
AVE MARIA -9, Rice Shop Street,**SATANKULAM**– 628 704, Thoothukudi District
Email:sssavemaria@gmail.com
Mobile:94425 29442

To

பொதுத் தகவல் அலுவலர்
புனித மரியன்னை மேல் நிலைப் பள்ளி
பொத்தக்காலன்விளை

அம்மா,

பொருள்: தகவல் அறியும் உரிமை சட்ட்த்தின் கீழ் தகவல் வேண்டுதல் - சார்பாக

பார்வை:- 1.Thoothukudi DEO's letter Na.Ka.No.7594/B4/15 dated 28.08.2015
2. Thoothukudi DEO's letter Na.Ka.No.4967/B4/15 dated 01.09.2015

பார்வையில் காண் கடிதங்கள் தூத்துக்குடி மாவட்டக்கல்வி அலுவலர் தங்களுக்கு அனுப்பியவை. அவைகளின் அடிப்படையில் கீழ்கண்ட விவரங்களை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் வேண்டுகிறேன். அதற்காக ரூபாய் 10க்கான நீதிமன்ற வில்லை ஒட்டியுள்ளேன்.

1. பார்வை 1ல் கண்ட கடிதத்திற்கிணங்க தாங்கள் மாவட்டக் கல்வி அலுவலருக்கு அனுப்பிய விவரங்களின் நகல் ஒன்றினை தகவலாக அனுப்பிடுக.

2. பார்வை 2ல் கண்ட கடிதத்திற்கிணங்க தாங்கள் மாவட்டக் கல்வி அலுவலருக்கு அனுப்பிய விவரங்களின் நகல் ஒன்றினை முழு வடிவில் தகவலாக அனுப்பிடுக.

3. மேலும் பார்வை 2ல் காண் கடிதத்துடன் தங்களுக்கு மாவட்டக் கல்வி அலுவலர் அனுப்பிய அனைத்து இணைப்புகளின் நகலினையும் தகவலாக அனுப்பி உதவிடுக.

நன்றி.

இப்படிக்கு,

இணைப்பு:-

பார்வையில் காண் கடிதங்களின் நகல்கள்

<u>Registered Post with A/D</u>

07.09.2015

From

S. Peter Raj M.A(His), M.A(Eco), M.A(Eng), M.A(Psy), M.A(Soc), M.A(Pol), M.A(Pub.Admin), M.A(GT), M.A(Ind.Cul), M.Ed, B.G.L.,
AVE MARIA -9, Rice Shop Street,**SATANKULAM**– 628 704, Thoothukudi District
Email:sssavemaria@gmail.com
Mobile:94425 29442

To

பொதுத் தகவல் அலுவலர்
மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகம்,தூத்துக்குடி

அய்யா,

<u>பொருள்:-</u>தகவல் அறியும் உரிமை சட்ட்த்தின் கீழ் தகவல் வேண்டுதல் - சார்பாக
<u>பார்வை:-</u> தங்களின் கடிதம் ஓ.மு.எண். 3513/ஆ4/15 நாள் 24.07.2015

பார்வையில் காண் கடிதம் மூலம் தாங்கள் தூத்துக்குடி தூத்துக்குடி ரோமன் கத்தோலிக்க டையோசிஸ்-ன் நீதிமன்ற வழக்கு எண். W.P.No.570/1975 சார்பான அலுவலக ஆவணங்களின் ஜெராக்ஸ் நகலில் கீழ்கண்ட வரியை Highlight செய்து இணைத்து அனுப்பியுள்ளீர்கள். <u>The Roman Catholic Diocese of TuticorinW.P.No.570 of 1975</u>

மேற்படி விவரத்தினை மைனாரிட்டி உரிமை பெற்றதற்கான ஆதாரமாக அனுப்பியுள்ளீர்கள். அதனடிப்படையில் கீழ்கண்ட விவரங்களை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் வேண்டுகிறேன். அதற்காக ரூபாய் 10க்கான நீதிமன்ற வில்லை ஒட்டியுள்ளேன்.

1.தாங்கள் குறிப்பிட்டுள்ள கல்வி முகமையின் பதிவு விவரங்கள் அடங்கிய ஆவணத்தின் நகலினை தகவலாக முழு வடிவில் அனுப்பிடுக.

2. மேற்படி W.P.No.570/1975-ல் நீதிமன்றம் எந்த தேதியில் தனது ஆணையை வெளியிட்டது என்ற விவரத்தினை தகவலாகத் தருக. மேற்படி கல்வி முகமை W.P.No.570/1975 வாயிலாக மைனாரிட்டி உரிமை பெற்றுள்ளதாகக் கூறி அதனடிப்படையில் தங்கள் ஆளுகையின்கீழ் உள்ள ஆர்.சி. பள்ளிகளுக்கு அங்கீகாரம், நிதி உதவி, நியமன ஒப்புதல்கள், பதவி உயர்வு ஒப்புதல்கள் வழங்குகிறீர்கள். மேற்படி ரிட் மனுவில் வெளியிடப்பட்ட நீதிமன்ற ஆணையின் உண்மை நகல் தங்கள் அலுவலகத்தில் உள்ளதா இல்லையா என்ற விவரத்தினை தகவலாகத் தருக. தங்கள் அலுவலகத்தில் உள்ளது என்றால் அந்த உண்மை நகலினை அனுப்பி உதவிடுக. நகல்

இல்லை என்றால் தாங்கள் மேற்படி முகமை மைனாரிட்டி உரிமை பெற்றுள்ளது என்பதை எவ்வாறு உறுதி செய்தீர்கள் என்ற விவரத்தினை தகவலாகத் தருக.

3. தாங்கள் Highlight செய்து அனுப்பியுள்ள தாளில் மேலிருந்து மூன்றாவது வரியில் பள்ளிக் கல்வி இயக்குநர் மேற்படி மைனாரிட்டி உரிமைக்கான ஒப்புதலை R.C.No.24541-G3/76DT20.11.1966 மூலம் தெரிவித்தாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆவணம்தான் மேற்படி கல்வி முகமையின் மைனாரிட்டி உரிமைக்கான ஆதாரமா வேறு ஏதேனும் ஆதாரங்கள் உள்ளனவா எனற விவரத்தினை தகவலாகத் தருக. வேறு ஏதேனும் ஆதாரங்கள் இருந்தால் அதன் நகலினை அனுப்பி உதவிடுக. மேலும் 1975ல் தொடரப்பட்ட வழக்கின் முடிவை 1966-ஆம் வருடமே அனுப்பியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் காரணத்தினை தகவலாகத் தருக.

4. தாங்கள் அனுப்பியுள்ள மேற்படி கல்வி முகமையின் மைனாரிட்டி உரிமை சார்பான ஆதாரங்களை தங்களுக்கு தங்கள் மேல் அதிகாரிகள் அலுவலக ரீதியாக அனுப்பின தேதி, அலுவலரின் பதவிப் பெயர் மற்றும் அன்னாரின் அலுவலக கடிதத்தின் விவரங்களை தகவலாகத் தருக. மேலும் தங்களின் மேலதிகாரிகள் மேற்படி ஆதாரங்களை இணைத்து அனுப்பிய அலுவலக கடிதத்தின் நகலினை அனுப்பி உதவிடுக.

5. மேற்படி தாங்கள் அனுப்பிய ஆவணத்தினை தாங்களே மேற்படி கல்வி முகமைக்கு ஆதரவாக அச்சிட்டு வைத்துள்ளீர்கள் என்றால் அதை எந்த ஆண்டு அச்சிட்டீர்கள் என்ற விவரத்தினை தகவலாகத் தருக.

6. தங்களின் ஆளுகையின் கீழ் செயல்படும் மேற்படி கல்வி முகமையின் கீழ் இயங்கும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் அங்கீகாகாரக் கருத்துருக்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் கல்வி முகமையின் பெயரை தகவலாகத் தருக.

7. தாங்கள் எப்போதாவது மேற்படி கல்வி முகமையிடம் அம்முகமை மைனாரிட்டி உரிமை பெற்றுள்ளதற்கு ஆதாரமாகக் கூறும் W.P.No.570/1975 என்ற வழக்கில் வெளியான நீதிமன்ற ஆணையின் உண்மை நகலினை அனுப்பி வைக்கும்படி வேண்டியுள்ளீர்களா என்ற விவரத்தினை தகவலாகத் தருக. அவ்வாறு வேண்டியிருப்பின் அக்கடித நகலினை தகவலாகத் தருக.

8. ஆசிரியர்களின் சான்றிதழ்கள், பணிப்பதிவேடுகளை துருவிப் பார்த்து சரியான ஒப்புதல்களையும் தவறெனக்கூறும் தங்கள் அலுவலகம் முழுக்க முழுக்க தவறான ஆவணங்களை காட்டி பள்ளிகளுக்கு அங்கீகாரம், நிதி உதவி மற்றும் பல்வேறு ஒப்புதல்களை வருடக்கணக்கில் பெற்றுவரும் மேற்படி கல்வி முகமை சார்பான ஆவணங்களின் உண்மைத்தன்மையை ஆராயாமல் இருப்பதன் காரணத்தினை தகவலாகத் தருக. ஆராய்ந்து அறியப்பட்டிருந்தால் ஆதாரத்தினை தகவலாகத் தருக.

மேற்கண்ட தகவல்களை முழுமையாகப் பெறுவதற்கு கூடுதலாகப் பணம் தேவை எனில் தயவு செய்து தெரிவிக்கவும். தாங்கள் தெரிவிக்கும் தொகையினை அனுப்புவத்றகுத் தயாராக உள்ளேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

அன்புடன்,